சீரமைப்புத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற்ற பிறகு, மூன்று ஆண்டுகள் கழித்துதான், உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று பார்த்து, அந்தக் கால்வாய்களின் வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பெறும். அப்படி அந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது வேண்டுமானால், நிதிப் பிரச்னை எழுந்தால் உலக வங்கியுடன் பேசியோ அல்லது நம் நிதியிலிருந்தே நிதியை ஒதுக்கியோ திட்டத்தை நிறைவேற்று வதற்குப் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சர்க்கரை மடை கண்மாயை, வைகை சீரமைப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கை இருந்தது. அது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திருச்செந்தூர் தொகுதியிலுள்ள இந்திரா கெமிக்கல்ஸ் நிறுவனம்

*வினா எண். 520—திரு. திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்செந்தூர் தொகுதியில் வீரபாண்டியன் பட்டினம், காயல் பட்டினம் இரண்டிற்கும் இடையே உள்ள சிண்டிகேட் பாங்கினால் பெரு முதலீடு செய்யப்பட்டு தற்சமயம் மூடி இருக்கும் இந்திரா கெமிக்கல்சை திறக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை எனில் இனியாவது எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) மற்றும் (ஆ) : இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் ஒரு பதிவு பெற்ற சிறிய தொழில் அல்ல. இருப்பினும், தொழில் வணிக இயக்குநரகம் எழுதிய பல கடிதங்களுக்கு மேற்படி இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிர்வாகத்தின் பங்குதாரர் களிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் அதன் புனர்வாழ்வுக்கான மேல் நடவடிக்கைகள் கூட எடுக்கப்பட முடியவில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வசிக்கும் திரு. பாலகிருஷ்ணன் கதாதரி, திருமதி பாலகிருஷ்ணன் கதாதரி, திரு. ஜி. ராமன் ஆகியோர் அந்த நிறுவனத்தினுடைய பங்குதாரர்கள். ஆனால் இந்த நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க முடியாததற்குக் காரணம், இது சிறு தொழில் இயக்குநருடைய அலுவலகத்தில் பதிவு செய்யப்பெறவில்லை என்பதுதான்.

[முற்பகல் 10-10]

திரு. சி. கேசவ ஆதித்தன் : இந்தத் தொழிற்சாலை என்ன மூலப் பொருளைத் தயாரிக்க நிறுவப்பட்டது? அங்கே வேலை பார்த்து வந்த தொழிலாளர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அது கெமிக்கல்ஸ் சம்பந்தமான நிறுவனம். இன்றைய தினம் அவர்கள் டி.ஐ.சி. அல்லது டைரக்டர் ஆப் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்ஸ்ட்டூட் ஆகியவற்றை அணுகினால் மீண்டும் அந்த நலிந்த ஆலையை வங்கி உதவியோடு திறக்க ஆவன செய்யப்படும்.

திருவண்ணாமலைப் பகுதியில் இரும்பு எடுக்கும் சாத்திய கூறுகள் பற்றிய ஆய்வு

*வினா எண். 521—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள மலைப் பகுதிகளில் இரும்பு எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி அறிய ஜப்பான் நாட்டு நிபுணர்களால் ஆய்வு ஏதேனும் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 1972 ஆம் ஆண்டில் ஜப்பானிய நாட்டிலிருந்து திருவாளர்கள் மாருபேனி கார்ப்பரேசன் (Tvl. Marubeni Corporation) நிறுவனத்தாரின் கனிம இயல் ஆய்வாளர் ஒருவர் திருவண்ணா மலைக்கருகில் உள்ள கவுத்திமலை, வேடியப்பன் மலைப் பகுதி களில் இரும்புக் கனிமங்கள் கிடைக்கும் பகுதிகளைப் பார்வையிட்டார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS